## கிலோ 160 ரூபாய்.. மாதத்திற்கு 240 கிலோ… செழிப்பான லாபம் தரும் செம்பருத்தி..!

## 10.12.2013



மலர்கள் பறிக்கும் பணி    மலர்களை காயவைக்குமிடம்

பூக்கள் என்றதுமே… பூஜைக்கு அல்லது தலையில் சூடிக்கொள்வதற்கு என இரண்டு பயன்பாடுகள்தான் பெரும்பாலானவர்களுக்குத் தெரியும். அதையும் தாண்டி அழகுப் பொருள், மருந்துப் பொருள், வாசனைத் திரவியங்களுக்கான மூலப்பொருள்… என பல பயன்பாடுகள் பூக்களுக்கு உண்டு என்பது சிலருக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்! இதைத் தெரிந்து வைத்திருக்கும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சோந்த முகமது இப்ராஹிம், மருத்துவ குணம் உள்ள பூக்களில் ஒன்றான செம்பருத்தியை சாகுபடி செய்து, சபாஷ் வாங்கும் வகையில் லாபம் ஈட்டி வருகிறார்.

திருச்செந்தூர் தாலுகா, பரமன்குறிச்சியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் கிராமம்.. காயாமொழி. இங்கேதான் இருக்கிறது முகமது இப்ராஹிமின் செம்பருத்தித் தோட்டம். காயல் பட்டினம் தான் என்னுடைய சொந்த ஊர். பி.எஸ்.ஸி கெமிஸ்டிரி, டிப்ளமோ ஃபுட்வேர் டெக்னாலஜி படித்துவிட்டு… ராணிப் பேட்டையில் ஒரு லெதர் ஃபேக்டரியில் 13 வருடம் வேலை பார்த்தேன். அங்கு அழகானத் தோட்டம் போட்டிருப்பாங்க. அந்த இயற்கைச் சூழல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். சின்ன வயதிலிருந்தே விவசாயத்திலும் ஆர்வம் அதிகம் என்பதால் அந்தத் தோட்டத்தை ரசித்துக் கொண்டே இருப்பேன். விவசாயம் பற்றி பேப்பரில் எந்த செய்தி வந்தாலும் முழுதாக படித்துவிட்டுதான் அடுத்த வேலையைத் தொடுவேன். இந்தச் சூழலில் வெளியான ‘பசுமை விகடன்’ என் கவனத்தை ஈர்க்க.. அதைப் படிக்கப் படிக்க, விவசாயம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மேலிட ஆரம்பித்தது. அதனால், முதல் புத்தகத்தில் ஆரம்பித்து, பசுமை விகடனை சேகரிக்க ஆரம்பித்தேன். இப்போது வரைக்கும் பத்திரப்படுத்திட்டும் இருக்கேன். கருப்பையா என்றவர் செம்பருத்தி சாகுபடி செய்வதைப் பற்றி ஒரு தடவை எழுதியிருந்தீங்க. அதைப் படித்துவிட்டு, அவரைத் தேடி சென்று பார்த்தேன். ‘செம்பருத்தியில் ஏக்கருக்கு ஒரு லட்சம் லாபம் எடுக்கலாம் என்று சொன்னார். உடனே, என் நண்பனிடமிருந்து, இந்த ஐந்து ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, இரண்டரை ஏக்கரில் செம்பருத்தி போட்டேன். நல்ல வருமானம் கிடைத்திட்டு இருக்கு. மீதி நிலத்தில் மலைவேம்பு வளர்ந்திட்டிருக்கு என்றார்.

### ஆறடி இடைவெளி!

செம்பருத்தி, செம்மண்ணில் நன்றாக வரும். தேர்வு செய்த ஒரு ஏக்கர் நிலத்தை டிராக்டர் மூலம் நன்கு உழுது.. வரிசைக்கு வரிசை, செடிக்குச் செடி 6 அடி இடைவெளி இருக்குமாறு விட்டு, ஒரு கன அடி அளவுக்கு குழி எடுத்துக் கொள்ள வேண்டும். (ஒரு ஏக்கரில் 1,200 குழிகள் வரை எடுக்கலாம்.) தொடர்ந்து சொட்டுநீர்ப் பாசனத்தை அமைத்ததுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு குழியிலும் ஒரு கிலோ சாணம், ஒரு

கிலோ மட்கிய தென்னை நார் ஆகியவற்றை இட்டு, தண்ணீர் ஊற்றி பத்து நாட்கள் அப்படியேவிட வேண்டும். 11-ம் நாள் செம்பருத்திக் கன்றுகளை நடவு செய்து, மண் அணைத்து தண்ணீர் விட வேண்டும். மண் எப்போதும் ஈரமாக இருக்குமாறு தொடர்ந்து, தண்ணீர் விட்டு வர வேண்டும்.

### அதிக உரம்.. ஆபத்து!

நடவு செய்த 2-ம் மாதத்திலிருந்து, மாதம் ஒரு முறை 200 லிட்டர் அமுதக்கரைசலை பாசன நீரில் கலந்துவிட வேண்டும். 6-ம் மாதத்திற்குப் பிறகு. செடிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பூக்கள் பூக்கும். 9-ம் மாதத்திற்குப் பிறகு அதிக அளவில் பூக்கள் பூத்து, 12-ம் மாதத்திற்குப் பிறகு முழு மகசூல் கிடைக்கத் துவங்கும். அதன் பிறகு, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 200 லிட்டர் தண்ணீரில், 2 லிட்டர் மீன் அமினோ அமிலம் என்ற கணக்கில் கலந்து, பாசன நீருடன் தரவேண்டும். இந்த இயற்கை இடுபொருட்களை அளவாகத்தான் இட வேண்டும். அளவுக்கு அதிகமானால், இலை தடித்து பூக்களின் மகசூல் குறையும். செம்பருத்தியில் அதிகமாக மாவுப்பூச்சிகளின் தாக்குதல் இருக்கும். இப்பூச்சிகள் தென்பட்டால், பச்சை மிளகாய் –பூண்டுக்கரைசலை அனைத்துச் செடிகளின் மீதும் செழிம்பாகத் தெளித்துவிட வேண்டும்.

### ஈரப்பதம்.. கவனம்!

செம்பருத்தியில் தினமும் பூக்கள் எடுக்கலாம். காலை 7 மணி முதல் 10 மணிக்குள் பூக்களைப் பறித்து வெயிலில் பரத்தி, ஒரு நாள் உலர்த்தி எடுக்க வேண்டும். வெயில் குறைவாக இருக்கும் பட்சத்தில் இரண்டு, மூன்று நாட்கள் வரை உலர்த்தலாம். பூக்கள் அரக்கு நிறத்திற்கு மாறுவதுதான் உலர்ந்ததற்கு அடையாளம். காய்ந்த பூக்களை எத்தனை மாதங்கள் வேண்டுமானாலும் இருப்பு வைத்து விற்க முடியும். இருப்பு வைக்கப்பட்டுள்ள பூக்களில் தண்ணீர் பட்டால், பூஞ்சணம் உருவாகிவிடும். அதனால்,ஈரப்பதம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதேபோல், செம்பருத்தியில் அதிக வருடங்கள் மகசூல் எடுக்க வேண்டும் என்று விரும்பினால் ஆண்டிற்கு ஒரு முறை கவாத்து செய்துவிட வேண்டும். இருப்பு வைத்திருக்கும் பூவை, வியாபாரிகளுடைய தேவையைப் பொருத்தோ, நம்மிடம் சேரும் அளவைப் பொருத்தோ விற்பனை செய்யலாம். செம்பருத்தி விவசாயத்தைப் பற்றி எனக்கு வழிகாட்டிய கருப்பையாவிற்கு நான் மாதம் மாதம் லாரியில் அனுப்பிவிடுவேன். அவர் எனக்கு, பணம் கொடுத்துடுவார். வருடத்தில் ஒன்பது மாதமும் பூ பறிக்கலாம். தினமும் சராசரியாக ஒரு ஏக்கரிலிருந்து 8 கிலோ பூ என்ற முறையில் இரண்டரை ஏக்கரிலும் 20 கிலோ கிடைக்கிறது. அதைக் காய வைத்தால், 8 கிலோ உலர்ந்தப் பூ கிடைக்கும்.

இரண்டரை ஏக்கரிலும் மாதத்திற்கு 240 கிலோ உலர்ந்தப் பூ. ஒரு கிலோவிற்கு சராசரியாக 160 ரூபாய் கிடைக்கிறது. இந்தக் கணக்கில் 9 மாதத்திற்கு இரண்டரை ஏக்கரிலிருந்து 3 லட்சத்து 45 ஆயிரத்து 600 ரூபாய் வருமானம். இதில் செலவு போக (குத்தகைத் தொகை இல்லாமல்) எப்படியும் இரண்டரை லட்ச ரூபாய் லாபமாக நிற்கும் என்றார்.

---

**தொடர்புக்கு**

**முகமது இப்ராஹிம், செல்போன் : 86828 -01148**

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.12.2013 www.vikatan.com***